தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone: 044–2838 9038; email: registrar@tnteu.ac.in; Website: www.tnteu.ac.in

**Lr. No.TNTEU/R/Elig./M.Ed Admission 2018-19/ 2066** **Date: 26.09.2018**

முனைவர் நா.இரவீந்திரநாத் தாகூர், Ph.D
பதிவாளர்(பொ)

பெறுநர்
முதல்வர்கள்,
இப்பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்.

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** கல்வி ஆண்டு 2018-2019 – பல்கலைக்கழக இணைவு பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - எம்.எட் சேர்க்கை – அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு நாள் அன்று சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் - நினைவூட்டல் - தொடர்பாக.

பார்வை: இப்பல்கலைக்கழக கடித எண்:TNTEU/R/Elig./M.Ed Admission 2018-19/244, நாள் 10.09.2018 மற்றும் 11.09.2018.

------

பார்வையில் கண்ட இப்பல்கலைக்கழகக் கடிதங்களின் வாயிலாக, ஏற்கெனவே தெரிவித்துள்ளவாறு, அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகளும், பல்கலைக்கழகத்தில் எம்.எட் சேர்க்கைக்கான அசல் சான்றிதழ்கள் சரிபார்ப்பு நாளில், கீழ்க்கண்ட ஆவணங்களை அவசியம் சமர்ப்பிக்கவேண்டும் என நினைவூட்டப்படுகிறது.

1. எம்.எட் படிப்பில் (முதலாண்டு) சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களது தகுதிக்கட்டணம் (eligibility fee), 28.09.2018 அல்லது அதற்கு முந்தைய தேதிகளில் ஒரே வங்கி வரைவோலையாக எடுத்து, அதன் பின்புறம் கல்லூரி எண் மற்றும் மாணவர்களது மொத்த எண்ணிக்கையை குறிக்கவும்.

2. மாணவர்கள் பூர்த்தி செய்து, சேர்க்கைக் குழுவால் மாணவர்களின் கல்வித் தகுதி சரிபார்க்கப்பட்டு, முதல்வர் கையொப்பமிட்ட விண்ணப்பங்கள் ஒவ்வொன்றுடனும், முதல்வர் சான்றொப்பமிட்ட கல்வி, மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ், ஆதார் அட்டையின் நகல்களை இணைக்கவும்.

3. போதிய கல்வித்தகுதியுடன் சேர்க்கை செய்யப்பட்ட அனைத்து மாணவர்களின்(qualified students) அசல் (original) கல்விச் சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ்கள்.

4. மாணவர்களது விவரங்கள் பதிவேற்றம் செய்து, பின் இணையதளத்திலிருந்து ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியே பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் (Individual online Admission Application Printouts)

5. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல் (Form-A)

6. பதிவிறக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் தகுதிப் பட்டியல் (Form-B)

7. NCTE Regulation-2014 விதியின்படி அண்மையில் NCTE வழங்கிய அங்கீகார (Recognition) ஆணையின் நகல்.

8. கடைசியாக பல்கலைக்கழகத்திலிருந்து பெற்ற எம்.எட் படிப்புக்கான இணைவு / தொடர் இணைவு (Provisional / Continuation of Provisional Affiliation) ஆணையின் நகல்கள்.

9. எம்.எட் படிப்பில் அனுமதிக்கப்பட்ட 50 மாணவர்களுக்கு, 10 தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழகம் வழங்கிய தகுதி ஒப்புதல் (Staff approval order) ஆணையின் நகல்.

மேலும், அசல் சான்றிதழ் சரிபார்ப்புப் பணி விரைவாக முடிக்க ஏதுவாக, ஒவ்வொரு மாணவனின் **அசல் சான்றிதழ்களை** – Community certificate, UG degree/provisional, UG consolidated mark sheet, PG degree/provisional, PG consolidated mark sheet, B.Ed degree/provisional, B.Ed mark sheets – என்ற வரிசையில் அடுக்கித் தயாராக வைத்துக்கொண்டு வருமாறு அறிவுறுத்தலாகிறது.

இப்பல்கலைக்கழக இணைவுடன் இயங்கும் கல்வியியல் கல்லூரிகளில், 2016-2018-ல் பி.எட் பயின்று, மே மாதம் 2018-ல் நடந்த பி.எட் ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் எம்.எட் சேர்க்கைக்கு, பி.எட் அசல் சான்றிதழுக்குப் பதிலாக பல்கலைக்கழக இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தேர்வு முடிவின் நகல்கள் (Result copy) மட்டும் இணைத்தால் போதுமானது.

**குறிப்பு: "2018-2019 ஆம் கல்வியாண்டில், எம்.எட் பட்டப்படிப்பு வழங்க, 10 தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து, அதற்கு பல்கலைக்கழகத்தின் தகுதி ஒப்புதலைப் (Staff approval) பெற்று, அதன் நகலை அசல் சான்றிதழ் சரிபார்ப்பின்போது பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பித்தால் மட்டுமே அக்கல்லூரியில் சேர்க்கை செய்த மாணவர்களுக்கான சேர்க்கை தகுதி ஒப்புதல் (Eligibility of admission) விண்ணப்பங்களை பரிசீலனைக்கு பல்கலைக்கழகம் எடுத்துக்கொள்ளும்."**

(signature) 26/9/18

**பதிவாளர் (பொ)**